# அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்ட அறிக்கை
# 2018








www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2018/0003 |
| செயற்றிட்ட இடம் | அரியாலை, இலங்கை. |
| செயற்றிட்ட காலம் | நவம்பர் 2018 - மே 2019 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | அரியாலை மக்கள் மன்றம் நோர்வே |
| முக்கிய பங்குத்தாரர்கள் | அரியாலை மக்கள் மன்றம், நூலக நிறுவனம்,ஊர் மக்கள்<br>புலம்பெயர் ஊர் மக்கள்,புலம்பெயர் சமூக அமைப்புகள்<br>கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மாணவர்கள்<br>மற்றும் நிர்வாகிகள் |
| பாதீடு (Budget) | 565,000 |

**நூலக நிறுவனம்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

**செயற்றிட்டச் சுருக்கம்**

அரியாலை மக்கள் மன்றம் அரியாலை புலம்பெயர் மக்களின் ஓர் ஊர் ஒன்றியம் ஆகும். இது நோர்வேயிலும் கனடாவிலும் கிளைகளைக் கொண்டுள்ளது. அவற்றுடன் இணைந்து ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் நூலக நிறுவனத்தின் வியூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பாகும். ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய செயற்பாடாக அமைந்தது.

**அறிமுகமும் பின்புலமும்**

ஊர் ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வியூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆய்வனுபவங்களின் அடிப்படையில், ஊர் தொடர்பில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள், தரவுகள் பற்றிய ஒரு சட்டகம் (வார்ப்புரு) உருவாக்கப்பட்டு. தகவல் வளங்கள், தரவுகள், ஒளிப்படங்கள், காணொளிகள், வாய்மொழி வரலாறுகள் முதலானவற்றை சேகரிக்கும் களப் பணிகள் ஊடாக ஒர் ஊரை ஆவணப்படுத்தல் தொடர்பான முறைமை உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வளங்களை நீண்ட காலம் பயன்படக் கூடிய வகையில் பாதுகாத்துப் பகிர்வதற்கான ஆவணப்படுத்தல் முறைகளையும் நாம் உருவாக்கி கிழக்கிலும் வடக்கிலும் சில ஊர்களை தேர்தெடுத்து முன்மாதிரிச் செயற்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சில திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இது தொடர்பான மேலதிக விபரங்களை நீங்கள் இங்கு பார்க்கலாம்: https://github.com/noolahamfoundation/village-documentation

அரியாலை மக்கள் மன்றம் நோர்வே உறுப்பினர்கள் (தொடர்பு: Nethaji Nadarajah) அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் தொடர்பாக நூலக நிறுவன இயக்குநர்களில் ஒருவரான சஞ்சயனை தொடர்பு கொண்டனர். மேலும் அவர்கள் கனடா அரியாலை மக்களை ஈடுபடுத்தி இந்தப் பணியை முன்னெடுக்கும் வண்ணம் ஸ்ரீமாஸ்டர் அவர்களின் தொடர்புகளை ஏற்படுத்தித் தந்தனர். நூலக கனடா அணி சார்பாக சுதர்சன் அவர்கள் ஸ்ரீமாஸ்டர் அவர்களுடன் தொடர்பு கொண்டு இந்தச் செயற்றிட்டத்தைப் பற்றிய தொடக்ககட்ட உரையாடல்களை மேற்கொண்டார். அரியாலை மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் இதர பங்குத்தாரர்களின் உள்ளீடுகள் பெறப்பட்டு செய்ற்றிட்டம் முழுமைப்படுத்தப்பட்டு அரியாலை மக்கள் மன்றத்திடமும் நூலக நிறுவன வழிகாட்டுநர் சபையிலும் ஏறுப் பெறுதல் வேண்டும். அதன் பின் இச் செயற்றிட்டம் நிறைவேறப்படுவதற்கான பணிகள் இடம்பெற்றன.

## இலக்குகளும் நோக்கங்களும்

அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் திட்டமானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருந்தது,

1. ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல் (collecting and linking information sources and data about a village)
2. பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆவணப்படுத்தல் (documentation), ஆவணகப்படுத்தல் (archiving), அணுக்கப்படுத்தல் (providing open access) பணிகளை மேற்கொள்ளல்.
3. ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் காண்தல்.
4. கொள்கையாளர்களுக்குப் பயன்படக் கூடிய தரவுகள் (எ.கா மக்கள் தொகை, கல்வி நிலைமை, பொருளாதார நிலைமை), நிலப்படங்கள் (maps) உட்பட்டவற்றை சேகரித்து, பகுப்பாய்ந்து அணுக்கப்படுத்தல்.
5. வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி பண்பாட்டு மரபுரிமைத் துறை பண்பாட்டு சுற்றுலா துறைகளைப் பலப்படுத்தல்.

## செயற்பாடுகள்

- பின்புல ஆய்வு (Desk Review)
    - சார்பிலக்கிய ஆய்வு (Literature Review)

- நூற்பட்டியல் உருவாக்கம் (Bibliography)
    - புள்ளி விபரங்கள் சேகரிப்பு ( Secondary Data Collection)
    - முக்கிய வளங்களை, தொடர்புகளை கண்டடைதல்

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகப்பும் (Collection Development & Digital Preservaiton)
    - நூல்கள், இதழ்கள், பத்திரிகைத் துண்டுகள்
    - நினைவு மலர்கள்
    - சிறப்பு மலர்கள்
    - துண்டுப் பிரசுரங்கள்
    - ஏனைய எழுத்தாவணங்கள்

- களப் பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)
    - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
    - ஒளிப்படங்கள் எடுத்தல்
    - காணொளிப் படப் பிடிப்பு
    - வாய்மொழி வரலாறுகள்
    - புள்ளிவிபர சேகரிப்பு/ஆய்வு (Primary Data Collection / Survey)

- களஞ்சியப்படுத்தல், பகிர்தல், அணுக்கப்படுத்தல் (Preservation, Dissemination & Access)
    - நூலக ஆவணப் படுத்தல் தளத்தில் உள்ளீடு செய்தல் (Ingesting into the repository)
    - பிற தளங்களில் உள்ளீடு செய்தல் (Sharing the data with other platforms)
    - ஊர் அமைப்புகளோடு அல்லது தளங்களோடு தரவுகளைப் பகிர்ந்தல் (Sharing the data with village organizations)
    - அச்சுவடிவில் அல்லது டிவிடி ஆக தொகுப்பினை வெளியீடு செய்தல்

### அடைவுகள்

- ஏற்கனவே நூலகம், ஆவணகத்தில் இருந்த அரியாலை தொடர்பான ஆவணங்களுக்கு மேலதிகமாக 500 புதிய ஆவணங்கள் இச்செயற்றிட்டம் ஊடாக இணைக்கப்பட்டன
- நூலகத்திலும் ஆவணகத்திலும் அரியாலைக்கான வலைவாசல்கள் உருவாக்கப்பட்டன.
- அரியாலை ஆளுமைகள் தொடர்பான விபரங்கள் இலகுவில் பெறக்க்கூடியவாறு அடையாளப்படுத்தப்பட்டன.
- இச்செயற்றிட்ட நிறைவில் அரியாலை தொடர்பான 570 ஆவணங்களும் 45 வாழ்கை வரலாற்றுக் கட்டுரைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

### எதிர்கொண்ட சவால்கள்

- ஊர் ஆவணப்படுத்தல் தொடர்பான விரிவான எதிர்பார்ப்புக்கள் புரவலர்களுக்கு இருக்கலாம். பொருத்தமானவற்றை உள்வாங்கி, பொருத்தமில்லாதவற்றை பொறுமையுடன் விளக்கிச் சொல்ல வேண்டி இருக்கும்.
- ஊர் ஆவணப்படுத்தல் தொடர்பான எமது அனுபவம் தற்போதுதான் நாம் பெற்று வருவதால் விளைபொருட்கள், தேவைப்படும் வளங்கள், ஆற்றல் தொடர்பில் நூலக நிறுவனத்துக்கு போதிய அனுபவம் இன்னும் இல்லாமல் இருக்கலாம்.

- தொடர்பாடலில் ஏற்பட்ட தாமதமும் தேவையான நிதி உரிய நேரத்தில் கிடைக்காமையும்
- செயற்றிட்டம் முழுமைப்படுத்தப்படாததால் செயற்றிட்டக் காலத்துக்குப் பிறகும் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டியிருந்தது.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- அரியாலைச் சேகரமானது ஒரு சிறந்த முன்மாதிரியாக வளர்த்தெடுக்கப்பட்டு அதன்மூலம் ஏனைய ஊர்கள், பிரதேசங்களை ஆவணப்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
- பல்லூடக ஆவணப்படுத்தலை மேற்கொள்ளப் பொருத்தமான போதிய கருவிகளை நூலகம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஒலி, ஒளிப் பதிவுகளைச் செப்பஞ்செய்து வெளியிடப் பொருத்தமான கணினி, மென்பொருட்கள், ஆளணி வளங்களை நூலகம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- செயற்றிட்டங்களைத் தொடங்க முன்னர் 25% ஆவது நிதியினை முன்கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டும்.